## இணையத்தால் ஏற்படும் விளைவுகள்

இன்றையக் காலக்கட்டத்தில் காற்று புகாத இடத்தில் கூட புகக் கூடிய ஆற்றல் ____________________________ உண்டு எனலாம். இணையம் தற்போது _____________________ வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. சிறுவர் முதல் பெரியவர் வரை இணையத்தைப் பயன்படுத்தும் முறையைக் கற்றறிந்து விரல் நுனியில் வைத்துள்ளனர். இணையத்தைப் பயன்படுத்துவதால் _______________ மற்றும் ________________ உள்ளன.

இணையம் என்ற ஒன்று இருப்பதால் ____________________ பெரும் பயன் அடைகின்றார்கள் எனலாம். மாணவர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான தகவல்களை இணையத்தில் உள்ள தளமான "கூக்கல்" அல்லது "யாகூ" போன்றவற்றில் பெற்றுக் கொள்ளலாம். தட்டச்சு செய்த ஒரு நொடி பொழுதிலேயே மாணவர்களுக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கப்பெறும். அதுமட்டுமின்றி, நமக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் இணையத்தின் வழி பெற்றுக்கொள்ளலாம். ஆக, ______________________________ கொள்வதற்கும் ________________________ உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கும் இணையம் துணைபுரிகின்றது.

தொடர்ந்து, இணையம் ________________________ வியாபரம் செய்யும் ஒரு தளமாகத் திகழ்கின்றது. இணையத்தில் உள்ள ________________________ தங்களின் வியாபரம் ஒட்டிய தகவல்களை வெளியிடலாம். இதன்வழி முகநூலில் உள்ள மக்கள் அப்பொருள்களை வாங்குவர். இணையத்தில் வியாபாரம் செய்வதால், நேரத்தை மிச்சப்படுத்தி வணிகத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் விரிவடையச் செய்யலாம். ஆக, இணையம் வியாபாரிகள் சிறப்பான முறையில் வியாபாரம் செய்யத் துணைபுரிகின்றது.

LIVEWORKSHEETS

அதனைத்தவிர்த்து, இணையத்தால் பல__________________________ஏற்படுகின்றது. இணையம் என்ற ஒன்றின் அறிமுகத்தால் இன்றைய மாணவர்கள் பலர் __________________________மூழ்கி உள்ளனர் எனலாம். சில மாணவர்கள் பள்ளி முடிந்தும், வார இறுதி நாள்களில் பெரும்பாலன நேரத்தைக் கணினி மையத்திலேயே செலவு செய்கின்றதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

மேலும், சிலர் இணையத்தளத்தில் உள்ள __________________________நேரத்தை அதிகம் செலவிடுகின்றனர். குறிப்பாக, மாணவர்களும் இவ்வாறு செய்வதால் தங்கள் கல்வியில் நாட்டத்தைச் செலுத்த தவறுகின்றனர். இதனால், தேர்வில் ____________________________பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அதுமட்டுமின்றி, சில இளைஞர்களோ, தகாத படங்களை இணையத்தில் பார்த்து __________________________________ஈடுபடுகின்றார்கள்.

ஆகவே, இணையத்தைப் பயன்படுத்துவதால் நன்மையும் தீமையும் ஏற்படுகின்றது. ஆக, அன்னப்பறவை போல் நீரை விட்டு விட்டு பாலை உறிஞ்சுவது போல நாமும் இணையத்தை நல்ல __________________________மட்டும் பயன்படுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| இணையத்திற்கு | குறைந்த மதிப்பெண்கள் | செயல்களுக்கு | குற்றச் செயல்களில் |
| மனிதர்களின் | தீமைகளும் | வலைத்தலங்களிலேயே | குறைந்த செலவில் |
| நன்மையும் | தீமையும் | மாணவர்கள் | தகவல்களை |
| அறிவை பெருக்கிக் | வியாபாரிகளுக்கு | இணைய விளையாட்டுகளிலே | |

LIVEWORKSHEETS